## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 25, 2017

**1. எந்த இந்திய வம்சாவளி திரைப்பட இயக்குநர், 2017 ஆம் ஆண்டுக்கான சீக்கிய அணிகலன் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார் ?**

A. சுக்பீர் சிங் சாந்து
B. குரிந்தர் சாதா
C. ஒய் கே சின்ஹா
D. பிரேம்லதா சிங்

**விடை: B. குரிந்தர் சாதா**

இந்திய வம்சாவளி பிரிட்டிஷ் இயக்குநர் குரிந்தர் சத்தா, பிரிட்டிஷ் திரைப்பட உலகத்திற்கு அளித்த மகத்தான பங்களிப்பிற்காக 2017 ஆம் ஆண்டுக்கான சீக்கிய அணிகலன் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார். பிரிட்டிஷ் சீக்கிய சங்கம் லான்காஸ்டர் ஹோட்டலில் மார்ச் 24 அன்று ஏற்பாடு செய்த வைசாகி இரவு விருந்தில் இங்கிலாந்து பாதுகாப்பு செயலாளர் மைக்கேல் ஃபால்லுனிடம் இருந்து இவ்விருதை இவர் பெற்றார். அவரது குறிப்பிடத்தக்க படங்களில் "கடற்கரையில் பாஜி", "பெண்ட் இட் லைக் பெக்காம்" மற்றும் "ப்ரைட் அண்ட் ப்ரெஜிடிஸ்" ஆகியவை அடங்கும். சாதாவின் சமீபத்திய படமான "வைஸ்ராயின் ஹவுஸ்" இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதி ஐந்து மாதங்களின் உண்மை கதையை சொல்கிறது மற்றும் பாகிஸ்தான் நிறுவல் மற்றும் இந்திய சுதந்திரத்தின் 70-வது ஆண்டு நிறைவும் இந்த ஆண்டுடன் பொருந்தி நிற்கிறது(coincides).

**2. தில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின்(AIIMS, Delhi) புதிய இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. கே கே சர்மா
B. எம் சி மிஸ்ரா
C. பிரதாப் சி ரெட்டி
D. ரந்தீப் குலேரியா

**விடை: D. ரந்தீப் குலேரியா**

டாக்டர் ரந்தீப் குலேரியா, தில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின்(AIIMS, Delhi) புதிய இயக்குனராக 5 ஆண்டுகளுக்கு அல்லது அவரது 65 வயது வரை நியமிக்கப்பட்டுள்ளார். நுரையீரல் மற்றும் உயிர் காக்கும் மருத்துவத்தில் மருத்துவ (Doctorate of Medicine) முனைவர் பட்டம் பெற்ற முதல் இந்தியர் இவரே. டாக்டர் குலேரியா, முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் தனிப்பட்ட மருத்துவராக பணியாற்றினார் மேலும் சுஷ்மா ஸ்வராஜ் மற்றும் அருண் ஜெட்லி போன்ற மத்திய அமைச்சர்களுக்கும் சிகிச்சை அளித்துள்ளார். ஜனவரி 2017-ல் எய்ம்ஸ் இயக்குனர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற டாக்டர் எம் சி மிஸ்ராவின் இடத்தை குலேரியா நிரப்பியுள்ளார்.

**3. எந்த இந்திய நடிகர், கலா ரத்தன் விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார் ?**

A. அனுபம் கெர்
B. அமிதாப் பச்சன்
C. அமீர் கான்
D. எஸ் பிரபாகர்

**விடை: A. அனுபம் கெர்**

பழம்பெரும் நடிகர் அனுபம் கெர், துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி மூலம் கலா ரத்தன் விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார். கெர், சினிமா மற்றும் கலை துறையில் அவரது பங்களிப்பிற்காக 2004 இல் பத்மஸ்ரீ விருது மற்றும் 2016-இல் பத்ம பூஷண் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார். இவர் முக்கியமாக இந்தி படங்களில் நடிக்கிறார் மற்றும் Bend It Like Beckham, Bride and Prejudice, The Mistress Of Spices, Ang Lee's Lust, Caution மற்றும் டேவிட் ஓ ரஸ்ஸெல்லின் 2013 ஆம் ஆண்டு ஆஸ்கார் வென்ற Silver Linings Playbook போன்ற பாராட்டப்பட்ட சர்வதேச படங்களிலும் பணியாற்றியுள்ளார்.

**4. சுகாந்த் கடாம்(Sukant Kadam), எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர் ?**

A. செஸ்
B. ஹாக்கி
C. பூப்பந்தாட்டம்

D. கிரிக்கெட்

**விடை: C. பூப்பந்தாட்டம்**

இந்திய பாரா பூப்பந்தாட்டம் வீரர் சுகாந்த் கடாம், ஸ்பெயின் நாட்டின் மயோர்காவில் நடைபெற்ற 2017 சர்வதேச ஸ்பானிஷ் பாரா-பேட்மிண்டன் போட்டியில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் வெண்கல பதக்கங்களை வென்றுள்ளார்.

**5. இந்தியாவின் முதல் செங்குத்து தோட்டம்(vertical garden), எங்கு அமைக்கப்பட்டுள்ளது ?**

A. பெங்களூரு
B. சென்னை
C. புனே
D. கொச்சி

**விடை: A. பெங்களூரு**

இந்தியாவின் முதல் செங்குத்து தோட்டம், நகரத்தின் மாசுபாடு நிலையை கட்டுப்படுத்த கர்நாடகா மாநிலத்தின் பெங்களூரில் உள்ள ஓசூர் ரோட்டில் அமைந்துள்ள எலக்ட்ரானிக் சிட்டி மேம்பாலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஒலி காப்பு தடையாக(sound proofing barrier) செயல்படும். இந்த தோட்டம், இயற்கையை பாதுகாக்கும் "SayTrees" எனும் அரசு சாரா நிறுவனத்தின் முன்னெடுப்பாகும். செங்குத்து தோட்டமானது,மேம்பாலத்தில் உள்ள தூண்களை அழகான மரக்கன்றுகள் மறைக்கும் வண்ணம் கரிம மற்றும் இயற்கையான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தினமும் 100 மில்லிலிட்டர் தண்ணீரை தாவரங்கள் பெற அனுமதிக்கும் தானியங்கி சொட்டுநீர் பாசன அமைப்பும் இந்த தோட்டத்தில் உள்ளது.

**6. குழந்தைகள் மத்தியில் நல்லிணக்கம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க, சமீபத்தில் இலங்கை அரசு 'PERU' என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியது. PERU என்பதன் விரிவாக்கம் என்ன ?**

A. Peace Education and Reconciliation Union

B. Peace Education and Reconciliation Unity
C. Peace Education and Reconciliation Unitary
D. Peace Education and Reconciliation Unit

**விடை: D. Peace Education and Reconciliation Unit**

இலங்கை அரசு, நூறாயிரக்கணக்கான மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க 'Peace Education and Reconciliation Unit' என்ற அமைப்பை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது.

**7. உலக சுற்றுச்சூழல் மாநாட்டின்(World Conference on Environment) 3-வது பதிப்பை எந்த நாடு ஏற்பாடு செய்தது ?**

A. சீனா
B. நார்வே
C. இலங்கை
D. இந்தியா

**விடை: D. இந்தியா**

உலக சுற்றுச்சூழல் மாநாட்டின்(World Conference on Environment) 3-வது பதிப்பை புதுதில்லியில் 2017 மார்ச் 25-ஆம் தேதி தேசிய பசுமை தீர்ப்பாயம் (NGT) ஏற்பாடு செய்தது. மரியாதைக்குரிய இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி இதனை தொடங்கி வைத்தார். 2-நாள் மாநாடு காற்று மாசுபாடு, நீர் மாசுபாடு, பொருளாதாரம் மற்றும் சுத்தமான தொழில்நுட்பம் மற்றும் நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் பங்கு போன்ற பல்வேறு பிரச்சினைகளை விவாதிக்கும். மாநாட்டின் அமர்வுகள் பின்வரும் கருத்துக்கள் குறித்து ஆழ்ந்து ஆராயவுள்ளது - எந்த எல்லைக்கு நாம் சுற்றுச்சூழல் சீரழிவை அனுமதிக்கலாம்; நாம் நம் எதிர்கால தலைமுறைக்கு என்ன விட்டுச்செல்ல போகிறோம்; சுற்றுச்சூழல் சீர்கேட்டினால் வரும் ஆபத்துக்களை குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியும்; எதிர்காலத்திற்கு எதையும் விட்டுசெல்லாமல் நாம் நம் முன்னோர்களிடம் இருந்த பெற்ற சொத்துக்களை முற்றிலும் விரயம் செய்யலாமா.

**8. உலக சிட்டுக்குருவி தினம் (World Sparrow Day), எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது ?**

A. மார்ச் 21
B. மார்ச் 20
C. மார்ச் 23
D. மார்ச் 25

**விடை: B. மார்ச் 20**

நகர்ப்புற பகுதிகளில் வாழும் பறவைகளின் முக்கியத்துவம் பற்றியும், மாசுபட்ட நகர்ப்புற சூழல்கள் மற்றும் சிட்டுக்குருவி, அதே சமயம் மற்ற பறவை இனங்களின் மீதும் அக்கறையற்ற மனிதர்களின் அச்சுறுத்தல் பற்றியும் பொது மக்களுக்கு கல்வி புகட்டுவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20-ஆம் நாள் உலக சிட்டுக்குருவி தினம் (WSD) அனுசரிக்கப்படுகிறது. Eco-Sys Action Foundation (France) மற்றும் உலகம் முழுவதும் ஏராளமான பிற தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து Nature Forever Society of India (NFSI) நிறுவனம் இந்த சர்வதேச தினத்தை முன்னெடுத்துள்ளது.

**9. 2017 உலக சுற்றுச்சூழல் கல்வி மாநாட்டை (WEEC), எந்த நாடு நடத்துகிறது ?**

A. இந்தியா
B. சீனா
C. கனடா
D. ஆஸ்திரேலியா

**விடை: C. கனடா**

9-வது உலக சுற்றுச்சூழல் கல்வி மாநாடு, கனடாவில் உள்ள வான்கூவர் கன்வென்ஷன் சென்டரில் 2017 செப்டம்பர் 9-15 ஆகிய தேதிகளில் "Culture/Environment: Weaving New Connections" என்ற மையக்கருவுடன் நடைபெறவிருக்கிறது. WEEC என்பது சுற்றுச்சூழல் மற்றும்

நிலைப்புத்தன்மைக்கான கல்வியை குறித்து உரையாற்றும் சர்வதேச மாநாடு ஆகும்.

**10. "அடிமைத்தனம் மற்றும் அட்லாண்டிக்கு அப்பாலான அடிமை வர்த்தகத்தால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூறும் சர்வதேச தினம்" எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது ?**

A. மார்ச் 27
B. மார்ச் 24
C. மார்ச் 25
D. மார்ச் 26

**விடை: C. மார்ச் 25**

இனவெறி மற்றும் பாரபட்ச ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, அடிமைத்தனம் மற்றும் அட்லாண்டிக்கு அப்பாலான அடிமை வர்த்தகத்தால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூறும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 25 அன்று அனுசரிக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டின் மையக்கரு “Remember Slavery: Recognising the Legacy and Contributions of People of African Descent”. அட்லாண்டி அடிமை வர்த்தகம், குறிப்பாக அடிமைப்படுத்தப்பட்ட ஆப்பிரிக்கர்கள் மற்றும் அவர்களின் சந்ததியினர் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டு தொடர்ந்து தொழில்நுட்பம் மற்றும் பண்பாடு ஆகிய பகுதிகளில் சமூகத்தினை கட்டமைக்கும் வழிகள் மீது கவனம் செலுத்த இந்த மையக்கரு தேர்வு செய்யப்பட்டுள்ளது.